# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, ஒகத்து மாதம் 18 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 15.25** **தபாற் செலவு : ரூபா 7.50**

**2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்**

*ச. வ. ஒ. 34/2005*

*[2006 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

**1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் விரிவுப்பெயரானது, "நீர்வாழ் உயிரின வளங்களையும் மற்றும் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் தொழிலையும் அபிவிருத்தி செய்வதற்கும் ;" எனும் சொற்களுக்குப் பதிலாக "நீரியல் பொருட்களைப் பண்படுத்தல், நீர்வாழ் உயிரின வளங்கள் மற்றும் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கும் முகாமை செய்வதற்கும் ;" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத் தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

*"பணிப்பாளர்கள் சபை.*

3. அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு ஆகியன (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பின்வருவோரைக் கொண்டிருக்கும் பணிப்பாளர்கள் சபை ஒன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்:-

(அ) உள்ளூர் கடற்றொழில் மற்றும் நீரியல் பொருட்களை பண்படுத்துதல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், கைத்தொழில்,

வர்த்தகம், நிதி, நிருவாகம் அல்லது சட்டம் எனும் துறைகளில் பரந்த அளவிலான அனுபவத்தைக் கொண்ட அத்துடன் இத்துறைகளில் ஆற்றலைக் காட்டியிருக்கின்ற ஆட்களிடையேயிருந்து (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட பணிப்பாளர்" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) அமைச்சரினால் நியமிக்கப்படும் ஐந்து பணிப்பாளர்கள் ; அத்துடன்

(ஆ) பின்வரும் பதவிவழிப் பணிப்பாளர்கள் :-

(i) கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ii) 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத் தாபனங்கள் சட்டத்தின்கீழ் தாபிக் கப்பட்ட, இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் ;

(iii) 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையச் சட் டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையத்தின் ஆளும் சபையின் தவிசாளர் ;

(iv) நிதி எனும் விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும், அவ் வமைச்சரின் அமைச்சின் அலு வலர் ஒருவர் ;

(v) *நீர்ப்பாசனம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சரின் அமைச்சின் அலுவலர் ஒருவர் ;*

(vi) *மகாவலி அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சரின் அமைச்சின் அலுவலர் ஒருவர் ;*

(vii) *கமத்தொழில் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சரின் அமைச்சின் அலுவலர் ஒருவர் ; அத்துடன்*

(viii) *சூழல் மற்றும் இயற்கை வளங்கள் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சரின் அமைச்சின் அலுவலர் ஒருவர்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–*

*"(4) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் கூட்டங்களில் சமுகமளிப்பதற்கும் பேசுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும், ஆனால் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(1) அப்பிரிவின் (அ) எனும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் :-*

" (அ) நாட்டின் மீன் உற்பத்தியையும் மீன் பாவனையையும் அதிகரிப்பதைக் கருத்திற்கொண்டு எப்பொழுதும் நிலைத்திருக்கின்ற நீர்த்தேக்கங்களிலும் பருவகாலத்திற்குரிய நீர்த்தேக்கங்களிலும் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல், நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் பண்படுத்தல் அடிப்படையிலான கடற்றொழில்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல் ;";

(2) அப்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் "கரையோர நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் மற்றும் கடற்பண்ணை" எனும் சொற்களுக்குப் பதிலாக, "சிறிது உப்பான நீரியல் பொருட்களைப் பண்படுத்தல், கரையோர நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் மற்றும் கடற் பண்படுத்தல்" எனும் சொற்களை இடுவதன்மூலம்

(3) அப்பிரிவின் (உ) எனும் பந்தியில் "மேம்படுத்துதலும் அபிவிருத்தி செய்தலும் ;" எனும் சொற்களுக்குப் பதிலாக "மேம்படுத்துதலும் வசதியளித்தலும் மற்றும் அபிவிருத்தி செய்தலும்;" எனும் சொற்களை இடுவதன் மூலம் ;

(4) அப்பிரிவின் (ஊ), (எ) மற்றும் (ஏ) எனும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் :-

" (ஊ) எப்பொழுதும் நிலைத்திருக்கின்ற நீர்த்தேக்கங்களிலும் பருவகாலத்துக்குரிய நீர்த்தேக்கங்களிலும் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் பண்படுத்தல் அடிப்படையிலான கடற்றொழில்கள் என்பவற்றை அவற்றுக்கு பயன்படுத்தப்படும் உயிரினப் பரம்பல், நீரியல் பொருட்களைப் பண்படுத்தல், நீரியல் வளங்களை பேணுவதன் தேவையைக் கருத்திற்கொண்டு முகாமை செய்தல், பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ;

(எ) நீரியல் வளங்களின் இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், விற்பனையாளர், விநியோகத்தர் மற்றும் வழங்குநர் ஒருவராக அலுவலைக் கொண்டுநடாத்துகின்றதும் அத்துடன் நீரியல் வளங்களின் இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர் வழங்குநர், விநியோகத்தர் மற்றும் விற்பனையாளர் ஒருவராக நீரியல் வளங்களின் அபிவிருத்தியில் மற்றும் நீரியல்பொருட்களைப் பண்படுத்தலில் ஈடுபடும் ஆட்களுக்கு உதவுதல் ;

(ஏ) எப்பொழுதும் நிலைத்திருக்கின்ற நீர்த்தேக்கங்களிலும் பருவகாலத்திற்குரிய நிர்த்தேக்கங்களிலும் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல், அத்துடன் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் பண்படுத்தல் அடிப்படையிலான கடற்றொழில்கள் என்பவற்றை முகாமை செய்வதற்கும், பாதுகாப்பதற்கும் மற்றும் அபிவிருத்தி செய்வதற்குமான திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும்"; அத்துடன்

(5) அப்பிரிவின் (ஐ) எனும் பந்தியை நீக்குவதன்மூலம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அ) எனும் பந்தியில், "அபிவிருத்திக்கான சாத்தியக்கூறை உறுதிப்படுத்துவதற்கென ஆராய்ச்சிகளையும்," எனும் சொற்களுக்குப் பதிலாக, "அபிவிருத்திக்கான சாத்தியக்கூறை உறுதிப்படுத்துவதற்கு ஆராயச்சிகளை நடாத்துவதில் உதவுதலும்" எனும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (இ) எனும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் :-

"(இ) நீரியல் பொருட்களைப் பண்படுத்துதலின் மேம்பாட்டிற்கும் அபிவிருத்திக்குமாக, நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் நிலையங்களைத் தாபித்தலும் பேணுதலும் மற்றும் முகாமை செய்தலும்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :-

*"அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி.*

13. (1) சபையானது உள்ளூர் கடற்றொழில்கள் மற்றும் நீரியல் பொருட்களைப் பண்படுத்துதலை முகாமைசெய்தல் என்பவற்றில் பரந்து அனுபவத்தையும் சிறந்த ஆற்றலையும் கொண்டுள்ள ஆளொருவரை (இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமித்தல் வேண்டும் என்பதுடன் அவர் அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அலுவலராதலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் பொதுவான பணிப்புக்கும் மற்றும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, அதிகாரசபையின் அலுவல்களின் உரிய நிர்வாகத்திற்கும் இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் அங்கீகாரத்திற்கமைய, அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அவரது அத்தகைய தத்துவங்களை அல்லது பணிகளை அதிகாரசபையின் வேறெவரேனும் ஊழியருக்கு எழுத்தில் கையளிக்கலாம். அத்தகைய ஏதேனும் தத்துவங்கள் அல்லது பணிகள் கையளிக்கப்பெற்றவரான ஊழியர் எவரும் பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்புரைகளுக்கமைய அவற்றைப் பிரயோகித்தலும் நிறை வேற்றுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத் தில் 14அ மற்றும் 14ஆ எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 14அ மற்றும் 14ஆ எனும் பிரிவுகளாகப் பயன்கொண்டதாதலும் வேண்டும் :-

"உரிமமளிக்கும் அலுவலர் களைப் பெயர் குறித்து நியமித்தல்.

14அ. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் அங்கீகாரத்துடன், கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களின் பணிப்பாளர் தலைமையதிபதியினால், உரிமமளிக்கும் அலுவலர்களாக நியமிக்கப்படவேண்டிய, நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் விசாலிப்பு அலுவலர் ஒருவரின் தரத்திற்குக் குறையாதவராக, அதிகாரசபையின் அத்தகைய அலுவலர்களைப் பெயர் குறித்து நியமிக்கலாம்.

(2) உரிமமளிக்கும் அலுவலர் ஒருவராக நியமிக்கப்பட்ட அலுவலர் எவரும், 14ஆ எனும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் மேலதிகமாக, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய அலுவலர்களுக்குக் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான ஏதேனும் கடமைகளை அல்லது பணிகளைப் புரிய அல்லது நிறைவேற்றத் தேவைப்படுத்தப்படல் வேண்டும்.

உரிமமளிக்கும் அலுவலர்களின் தத்துவங்களும் பணிகளும்.

14ஆ. (1) உரிமமளிக்கும் ஒருவர் -

(அ) நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் நடவடிக்கை ஒன்றினைத் தொழிற்படுத்தும் அல்லது தொழிற்படுத்துவதில் ஈடுபட்டுள்ள நோக்கத்திற்காக எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமமொன்றை ஏதேனும் நேரத்தில் பார்வையிடுவதற்கும் பரிசோதிப்பதற்கும் ;

(ஆ) எந்த இடம் அல்லது வளவுகள் தொடர்பில் உரிமமொன்றானது வழங்கப்பட்டதோ அந்த ஏதேனும் இடத்தை அல்லது வளவுகளைச் சோதனையிடுவதற்கும் பரிசோதிப்பதற்கும் ;

(இ) வழங்கப்பட்ட உரிமமொன்றின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அல்லது இச்சட்டத்தின் கீழ் அல்லது அது தொடர்பான 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான உரிமம் வைத்திருப்பவரினால் வைத்திருக்கப்படவேண்டுமென அல்லது பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆவணங்களின் பிரதிகளை எடுப்பதற்கு ;

(ஈ) இச்சட்டத்தின் அல்லது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் தீவிரமாக ஒவ்வாத ஏதேனும் கொண்டு நடாத்தப்படுகின்றது என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணம் எதனையும் நாளின் எந்த நியாயமான நேரங்களில் உரிமமளிக்கும் அலுவலர் கொண்டுள்ளாரோ அந்த எல்லா நியாயமான நேரங்களிலும் ஏதேனும் இடத்தில் அல்லது வளவுகளில் புகுந்து சோதனையிடுவதற்கு ;

(உ) பந்தி (ஈ) யின்கீழ் ஏதேனும் இடத்தை அல்லது வளவுகளைச் சோதனையிடும்போது கண்டெடுக்கப்பட்ட ஏதேனும் மீனின் அல்லது வேறு நீர்வாழ் உயிரின வளங்களின் மாதிரிகளை எடுப்பதற்கு ;

(ஊ) ஏதேனும் நீர்வாழ் உயிரின வளங்களை அல்லது அலங்கார மீனைக் கைப்பற்றுவதற்கு அல்லது சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதென அல்லது பயன்படுத்தப்படக்கூடுமென நம்புவதற்கு அவர் காரணத்தைக் கொண்டுள்ளதான டைனமைற் அல்லது வேறு கெடுதி விளைவிக்கின்ற அல்லது பாதகமான பொருளைக் கொண்டுள்ளதான ஏதேனும் நச்சுத்தன்மையான, உணர்வை மழுங்கடிக்கச் செய்கின்ற பதார்த்தத்தைக் கைப்பற்றுவதற்கு ;

(எ) இச்சட்டத்தின் கீழ் அல்லது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் தவறொன்றின் புரிகையில் ஏதேனும் படகு, மீன்பிடிவலை, வேறு மீன்பிடி துணைப்பொறி, கருவி, வாகனம் அல்லது பொருட்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன அல்லது தொடர்புபட்டிருக்கின்றன என அவர் நம்புவதற்கு ஏதுவிருப்பின் கைப்பற்றுவதற்கு ; அத்துடன்

(ஏ) விடயத்திற்கேற்றாற்போன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது சபையினால் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் கடமையை அல்லது பணியைப் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும்,

தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) உரிமமளிக்கும் அலுவலர் ஒருவர் இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவத்தையும், கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதிலும், புரிவதிலும், பிரயோகிப்பதிலும் பொலிசாரின் உதவியை நாடலாம் என்பதுடன் வேண்டப்பட்டிருக்கின்றவாறாக அத்தகைய எல்லா உதவிகளையும் கொடுத்துதவுவதும் பொலிசாரின் கடமையாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஊ) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 43ஊ எனும் பிரிவு மற்றும் 57அ எனும் பிரிவு என்பவற்றின்கீழ் அதிகாரசபையினால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 32அ மற்றும் 32ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**10.** பின்வரும் புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அவை அம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 32அ மற்றும் 32ஆ என்னும் பிரிவுகளாகப் பயன்கொண்டதாதலும் வேண்டும் :—

*"அதிகாரசபை வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பது.*

32அ. அதிகாரசபையானது, முற்போந்த ஆண்டின்போது, உரிமமளிக்கும் அலுவலர்களினால் புரியப்பட்ட வேலை தொடர்பாக, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையொன்றை வருடாந்தம் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்துதல் வேண்டும்.

*அதிகாரமளிக்கப்படாத கட்டிடங்களை அல்லது கட்டமைப்புகளை இடித்தழித்தல்.*

32ஆ. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் vi ஆம் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணான ஏதேனும் நடவடிக்கைகளுக்கு ஏதேனும் கட்டிடம்

அல்லது வேறு கட்டமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதுசார்பில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பெற்ற எவரேனும் உரிமமளிக்கும் அலுவலர், எழுத்திலான அறிவித்தலொன்றின் மூலம் அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் ஆளை அல்லது ஆட்களை அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து அல்லது அதற்குமுன் அந்நடவடிக்கையைக் கொண்டுநடாத்துவதை நிறுத்துமாறு தேவைப்படுத்தலாம். அத்தேதி எவ்வாறாயினும் அத்தகைய அறிவித்தலில் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் எவ்வாள் அல்லது எவ்வாட்கள்மீது அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டுள்ளவிடத்து அவ்வாள் அல்லது ஆட்கள், பணிப்பாளர் தலைமையதிபதியால் அல்லது எவ்வுரிமமளிக்கும் அலுவலரால் அத்தகைய அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதோ அவ்வுரிமமளிக்கும் அலுவலரால் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அல்லது அனுமதியளிக்கப்பட்டிருக்கின்றவாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்தினுள் அதனது தேவைப்பாடுடன் இணங்கியொழுகத் தவறுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய உரிமமளிக்கும் அலுவலர் எந்நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்கத்தினுள் அத்தகைய கட்டிடம் அல்லது வேறு கட்டமைப்பு அமைந்துள்ளதோ அந்நீதிவான் நீதிமன்றுக்கு அத்தகைய கட்டிடங்களை அல்லது வேறு கட்டமைப்புகளை இடித்தழிப்பதற்கான கட்டளையொன்றைப் பெறுவதற்கு விண்ணப்பமொன்றை ஆக்கலாம்.

(3) நீதிவான், விடயத்தின் சூழ்நிலைகளில் தோதானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்னர், எக்கட்டிடம் அல்லது வேறு கட்டமைப்புத் தொடர்பில் விண்ணப்பம் ஆக்கப்பட்டதோ அக்கட்டிடத்தை அல்லது வேறு கட்டமைப்பை இடித்தழிப்பதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கட்டளையொன்று அத்தகைய நீதிமன்றத்தின் பிஸ்காலுக்கு வழங்கப்படுதல் வேண்டும். அவர் அத்தகைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு எல்லா அவசியமான நடவடிக்கைகளையும் உடனடுத்து எடுத்தல் வேண்டும் என்பதுடன் எம்முறையில் அத்தகைய கட்டளை நிறைவேற்றப்பட்டதென நீதிமன்றத்துக்கு எழுத்தில் அறிக்கையிடுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

"*ஒழுங்கு விதிகள்.*

37. (1) அமைச்சர், இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதோ அவை தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினுள் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் அமைச்சர் பின்வரும் கருமங்கள் எல்லாம் அல்லது ஏதேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) நீர்வாழ் உயிரின ஊடகப் பாதுகாப்பைக் கொடுப்பதற்கான முறை ;

(ஆ) உள்ளூர் நீர்நிலைகளில் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் நடவடிக்கைகள் என்னமுறையில் நடாத்தப்பட வேண்டும் என்பது ;

(இ) நீரியல் பொருட்களைப் பயன்படுத்தலின் முகாமை, ஒழுங்குபடுத்தல், பேணல் மற்றும் அபிவிருத்தி என்பவற்றில் எடுக்கப்படவேண்டிய நடைமுறைகள் அத்துடன் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் ;

(ஈ) புள்ளிவிபரங்களையும் மற்றும் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் நடவடிக்கைகளில் மீன்பிடித்தல், சந்தைப்படுத்தல் அல்லது பதப்படுத்தல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள ஆட்கள் தமது தகவலை முன்வைக்கும் முறையையும் சேகரித்தல் ; அத்துடன்

(உ) நீரியல் பொருட்களைப் பயன்படுத்தலுக்காக மீன் மற்றும் வேறு நீர்வாழ் உயிரின வளங்களை எடுக்கும் நோக்கத்திற்காக அல்லது அதனோடு தொடர்புடைய ஏதேனும் குறிப்பான உபகரணம், சாதனம், முறைமை அல்லது பதார்த்தம் என்பவற்றைப் பயன்படுத்துவதனைத் தடைசெய்தலும் உள்ளூர் நீர்களில் மீன் மற்றும் வேறு நீர்வாழ் உயிரின வளங்களை எடுக்கும் நேரம் மற்றும் முறையினை ஒழுங்குபடுத்தலும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியாகக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் ஏலவே ஆக்கப்பட்டதெதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(5) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "நீரியல் பொருட்களைப் பயன்படுத்தல்", "நீரியல் பொருட்களைப் பண்படுத்தற் தொழில் முயற்சி", "நீர்வாழ் உயிரின வளங்கள்", "மீன்", "மீன்பிடிப் படகு" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலம் —

"கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களின் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 2000 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும் ;

"உரிமமளிக்கும் அலுவலர்கள்" என்பது, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் என்று பொருள்படும் ;

(2) "மாகாண சபை" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களைச் சேர்ப்பதன் மூலம் :—

"எப்பொழுதும் நிலைத்திருக்கும் நீர்த்தேக்கம்" என்பது, வருடம் முழுவதும் நீரை நிறுத்தி வைக்கத்தக்கதான மனிதனால் கட்டப்பட்ட நீர்த்தேக்கம் ஒன்று என்று பொருள்படும் ; அத்துடன்

"பருவகாலத்திற்குரிய நீர்த்தேக்கம்" என்பது, வருடத்தின் குறித்த சில காலப்பகுதியின்போது முற்றாக வரண்டு போகின்ற மனிதனால் கட்டப்பட்ட நீர்த்தேக்கம் ஒன்று என்று பொருள்படும்.".

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னர் பதவி வகிக்கின்ற பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள், இச்சட்டத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் எப்படியிருப்பினும், இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் புதிய பணிப்பாளர்கள் சபையானது உருவாக்கப்படும் வரை அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

*பேணல் வாசகம்.*

(2) இச்சட்டத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் எப்படியிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவி வகிக்கும் ஆள் இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*